1990 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. கே. என் நேரு: தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கருத்தைப் பரிசீலனை செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையில் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. உரிமை மீறல் பிரச்சினை.

'தினமணி' நாளிதழ் மீது—இலங்கையிலிருந்து திரும்பிய இந்திய இராணுவம் குறித்து முதலமைச்சர் அவையில் பேசியதாக வந்துள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். கணபதி அவர்கள் ''தினமணி'' நாளிதழில் வந்துள்ள ஒரு செய்தி குறித்து, அவை உரிமை மீறல் பிரச்சினைக்கான அறிவிப்பைக் கொடுத்துள்ளார்கள். இது எவ்வாறு அவையின் உரிமையை மீறிய செயலாகும் என்பதைக் குறித்து மிகச் சுருக்கமாக விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபகாலமாக கடந்த சட்டமன்றக் கூட்டங்களில் இந்திய ராணுவத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வரவேற்காததற்கான காரணத்தைப் பற்றிய பிரச்சினை ஒரு பிரச்சினையாக இருந்து வந்தது. அந்தப் பிரச்சினையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துள்ள திட்டவட்டமாக அழுத்தந்திருத்தமாக சொல்லிய கருத்து, இந்திய இராணுவம் தான் என்று சொல்லி வந்து இருக்கிறார்களே தவிர, தனிப்பட்ட ஒருவரின் ராணுவம் என்றோ. படை என்றோ அதைச் சொல்லவில்லை. ஆனால், வேண்டுமென்றே. இந்த அவையில் உறுப்பினராக இருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களைக் களங்கப்படுத்தவேண்டும் என்று, செய்தியைத் திரித்துக் கூறுகின்ற முகத்தான் அல்லாததை இட்டுக்கட்டுகின்ற வகையிலே, இன்றைக்கு தினமணி பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. ஒன்பதாவது பக்கத்திலே, நேற்றைய தினம் சட்டமன்ற நிகழ்ச்சிகளைப் பற்றிய ஒரு செய்தி வெளியிட்ட இடத்தில், ''இந்திய ராணுவத்தை ராஜீவ் காந்தியின் படை என்று கருணாநிதி கூறியதைக் கண்டித்து மூப்பனார் பேசியுள்ளது குறித்து கதிரவன் பேசத் தொடங்கியதுமே'' என்று செய்தியை வெளியிட்டு இருக்கிறார்கள். அந்தச் செய்தியினுடைய அடிப்படை, ஏதோ மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்திய ராணுவத்தை ராஜீவ் காந்தியின் படை என சொன்னதைப் போலவும் அந்தக் கருத்தையொட்டி, மூப்பனார்

ஏதோ பேசியதைப் போலவும் அங்கேயிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லாத ஒரு கருத்தை, திட்டவட்டமாக மறுத்துவிட்ட ஒரு கருத்தை, வேண்டுமென்றே, அவர்களுக்கும். இந்த அவைக்கும் இழுக்குத் தேடுகின்ற விதத்திலே தினமணி பத்திரிக்கை செய்தியாக வெளியிட்டு இருப்பது இந்த அவையின் உரிமை மீறிய செயலாகும் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. ''Shakdar and Kaul; May's Parliamentary practices'' என்ற அந்தப் புத்தகத்திலே ''வேண்டுமென்றே ஒரு உறுப்பினர் பேசியதைத் திரித்துக் கூறுவதும், பேசாததைப் பேசியதாகச் சொல்வதும் உரிமை மீறிய செயல்'' என்று தெளிவாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. எனவே இந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்பித் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது குறித்து அந்த நாளிதழின் ஆசிரியரிடமிருந்து விளக்கம் கேட்டு, பின்னர் என் தீர்ப்பை அளிக்கிறேன்.

3. கவன ஈர்ப்பு.

(அ) குன்றத்தூர், தேனி பகுதிகளில் மூளைக் காய்ச்சல் நோய் பரவியுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் எஸ். ஆர். இராதா, ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர், குமரி அனந்தன், எஸ். டி. உகம்சந்த், எஸ். எஸ். ராமசுப்பு, என். பழனிவேல், எஸ். ஏ. தங்கராஜன், மற்றும் ஜி. பொன்னுபிள்ளை ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழகத்தில் குறிப்பாக செங்கை—அண்ணா மாவட்டம் குன்றத்தூர் மற்றும் மதுரை மாவட்டம் தேனி பகுதிகளில் மூளைக் காய்ச்சல் நோய் பரவி உள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்: